Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**C.C.No.124/2023**

**Deposition of PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :சித்ரா | ஜாதி | : |
| க/பெ | :கணேஷ்குமார் | தொழில் | : GH. Athoor. |
| கிராமம் | :செம்பட்டி | சமயம் | : |
| தாலுகா | :ஆத்தூர் | வயது | :37/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.01.2024.

(Accused A1, A3 Present. A2, A4 absent. U/s.317 Crpc petition filed and allowed.)

முதல் விசாரணை

நான் செம்பட்டியில் குடியிருந்து கொண்டு ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரரன அ.சா.1 எனது கணவர் ஆவார். கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு இந்த வழக்கின் எதிரிகள் கார்த்திக், தினேஷ்கண்ணன், தினேஷ், சாமுவேல் ஆகியோருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அந்த புகார் மனுவில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். அந்த புகார் மனுவின்பேரில் பதிவு செய்யப்பட்ட இந்த வழக்கில் மேற்கண்ட எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டோம். மேலும் எதிரிகள் அனைவரும் எனது கணவருக்கு இரத்த உறவினர்கள் ஆவார்கள். எனவே இந்த வழக்கில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவையில்லை. மேலும் இந்த வழக்கை பற்றி வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகளுடம் சமாதானமாக சென்று சமரச மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். போலீசார் என்னிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது.

P JAISANKAR — Digitally signed by P JAISANKAR
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.